குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.11/2023

ம.சா. 1

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் தேதி சனி கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| தந்தை பெயர் | தங்கவேல் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.03 மணி,

Complainant Govindharaj present. Advocate Mr.Nepoliyan present for Advocate Mr.G.Munusamy for Complainant. Accused Venu absent. Petition u/s 355 BNSS filed and allowed. Advocate Mr.P.Soundhararajan present for Accused.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) எனது பிரமாண பத்திரிக்கையில் குடும்ப அவசர செலவிற்காக எதிரி கடன் கேட்டு இருந்தார் என்று நான் சொல்லியுள்ள நிலையில் என்ன தேவை என்றால் வீடு கட்டுவதற்காக பணம் கேட்டார். எதிரி என்ன வீடு கட்டுவதற்காக பணம் கேட்டார் என்றால் தார்சு வீடு கட்டுவதற்காக. தார்சு வீடு கட்டுவதற்கு முன்பாகவே எதிரி என்னிடம் பணம் கேட்டு இருந்தார். என்னிடம் எதிரி ரூ.1,50,000/– கடன் வாங்கியுள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் எதிரி எந்த இடத்தில் வீடு கட்டினார் என்றால் எதிரியின் பழைய வீட்டின் அருகில் குள்ளக்கவுண்டனூரில் கட்டினார் நான் சென்று பார்த்துள்ளேன். தெருவின் பெயர் எனக்கு தெரியாது.

2) எதிரி கட்டியிருந்த வீடு நான் பார்த்த சமயத்தில் என்ன நிலையில் இருந்தது என்றால் கடக்கால் (Basement) போடுவதற்காக குறிக்கப்பட்டு இருந்தது. பொதுவாக வீடு கட்டுவதற்கு சிறிது பணம் கையில் வைத்துக் கொண்டு கடக்கால் வேலைகளை முடித்துவிட்டு பணம் ஏற்பாடு செய்வார்கள், ஆனால் நான் சொல்வது போல் ஆரம்பம் முதலே வீடு கட்ட யாரும் பணம் வாங்க மாட்டார்கள் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்த தேதி எப்போது எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்றால் நான் கடன் கொடுப்பதற்கு 3–4 மாதங்களுக்கு முன்பு கேட்டு இருந்தார். மேற்படி சங்கதியை எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரி.

3) எதிரி 3–4 மாதங்களுக்கு முன்பு கடன் கேட்டு இருந்தால் அந்த சங்கதியை எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் 25.09.2022 ம் தேதி எதிரிக்கு பணம் கொடுத்தேன். எதிரி என்னிடம் இருந்து எங்கு

பணம் வாங்கி சென்றார் என்றால் கொல்லப்பட்டி மருத்துவக் கல்லூரிக்கு எதிரில் உள்ள கவுண்டர் டீ கடைக்கு வரச் சொல்லி இருந்தேன் அங்கு வந்து பணத்தை வாங்கி சென்றார். மேற்படி பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நேரத்தில் என்னுடன் கோபி என்ற எனது நண்பர் இருந்தார். மேற்படி கோபி என்பவர் பணம் கொடுக்கும் சமயத்தில் உடன் இருந்தார். மேற்படி சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

4) இவ்வழக்கு காசோலை யாரால் நிரப்பப்பட்டது என்றால் நான் ஏற்கனவே காசோலை எடுத்து வருமாறு சொல்லியிருந்தேன், அதே போல் காசோலை எடுத்து வந்தார். மேற்படி காசோலை யாரால் நிரப்பப்பட்டது என்று நான் கேட்கவில்லை, மேற்படி காசோலை ஆங்கிலத்தில் நிரப்பப்பட்டு இருந்தது. எதிரி என்ன படித்திருக்கிறார் என்றால் தெரியாது. எதிரிக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எனக்கு எப்படி பழக்கம் என்றால் நான் கல்லூரி செல்லும் பேருந்தில் அவர் ஓட்டுநராக இருந்தார். எதிரி எனக்கும் எனது மனைவிக்கும் உறவினர் அல்ல.

5) எதிரி அருந்ததியர் சமுதாயத்தை சார்ந்தவர், நான் வன்னியர் சமுதாயத்தை சார்ந்தவர். எதிரியும் எனது மனைவியும் உறவினர் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எதிரியும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றாலும் உறவினர்கள் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும் மற்ற விபரங்களும் வெவ்வேறு மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரி. காசோலையில் உள்ள தேதியும், எண்ணால் எழுதப்பட்ட தொகையும் வேறு மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரி. நான் சொன்னவாறு எதிரி பூர்த்தி செய்து எடுத்து வந்து இருந்தால் பேனா மை வேறுபாடு இருந்திருக்காது என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரிதரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.24 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.